# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஏப்ரல் 20, 2024

Weekly E-paper ● April 20, 2024




# தொடரட்டும்...!

சுப. வீரபாண்டியன்

## இயக்க செய்திகள்

## 39 இனி 31 என்றாவதா?

தலையங்கம்

## பா.ஜ.கவின் வீழ்ச்சியை வழிமொழியும் வட இந்தியா!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஏப்ரல் 20, 2024 Weekly E-paper ● April 20, 2024


# தொடரட்டும்...!

சுப. வீரபாண்டியன்

தமிழ்நாட்டில் கோடை வெயில் கொளுத்திக் கொண்டிருந்தாலும், தேர்தல் வெயில் நிறைவடைந்திருக்கிறது! 20 நாள்களுக்கு மேலாக, திரும்பும் திசையெல்லாம் பல்வேறு முழக்கங்கள், பேரணிகள், மக்களை ஈர்க்க வேட்பாளர்கள் செய்து காட்டிய விதவிதமான வித்தைகள் எல்லாம் ஒரு முடிவுக்கு வந்து, தேர்தலும் நடந்தேறி விட்டது!

தமிழ்நாட்டில் எப்போதும் போல் 70 விழுக்காடு வாக்குகள் சராசரியாகப் பதிவாகி இருக்கின்றன. புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள வேங்கைவாசலில், கடைசி நேரத்தில் 1500 பேர் ஒன்றாகத் திரண்டு வந்து வாக்களித்திருக்கின்றனர்.

சென்னை வியாசர்பாடிப் பகுதியில், எந்தச் சின்னத்தில் வாக்களித்தாலும், அது தாமரைச் சின்னத்திற்கே போயிருக்கிறது. இது போல வேறு எங்கும் நடந்திருக்குமோ, கவனிக்காமல் விட்டிருப்பார்களோ என்கிற கவலை ஏற்படுகிறது!

கோவைத் தொகுதியில் ஒரு லட்சம் வாக்காளர்களின் பெயர்கள், பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. அத்தனை பேரும் பாஜக ஆதரவாளர்களாக இருக்கிறார்கள் என்று இரு பெரும் செய்திகளை அண்ணாமலை கூறி உள்ளார்! அது உண்மையாக இருக்குமானால், தேர்தலுக்கு முந்திய நாள் வரை அதனைக் கூட கண்டுபிடிக்க முடியாத ஒரு கட்சியா பாஜக என்னும் ஐயம் எழுகிறது! இல்லை, அண்ணாமலை நேற்று வரை கோமாவில் இருந்தாரா என்றும் கேட்கத் தோன்றுகிறது! ஒரு நண்பரின் கூற்றுப்படி, தான் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கப் போவது உறுதி என்பது புரிந்து விட்ட காரணத்தால்தான் அண்ணாமலை இப்படி ஒரு புதிய புரளியைக் கிளப்பி விடுகிறாரோ என்னவோ தெரியவில்லை!



நேற்று இந்தியா முழுவதும் நடைபெற்றுள்ள 102 தொகுதிகளின் தேர்தல் நிலவரங்கள் முழுமையாக இன்னும் வெளி வரவில்லை. இருப்பினும், கிழக்கு நாகாலாந்தில் ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த 4 லட்சம் மக்கள் வாக்களிக்க மறுத்துவிட்டனர் என்பது ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாக உள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் இறுதி வரையில் ஒருவர் கூட வாக்களிக்க வரவில்லை என்பது வியப்பாகவே இருக்கிறது!

தமிழ்நாட்டைப் பொறுத்தளவு, சேலம், கரூர், நாமக்கல், கள்ளக்குறிச்சி ஆகிய தொகுதிகளில் ஏறத்தாழ 75 விழுக்காடு வாக்குகள் பதிவாகியுள்ளன. சென்னையில் உள்ள மூன்று தொகுதிகளில் மட்டுமே எழுபதுக்கும் குறைவான விழுக்காடு அளவில் வாக்குகள் பதிவாகியுள்ளன!

சென்னை மாநகர மக்கள், தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதில், ஏனோ எப்போதும் பின்தங்கி நிற்கின்றனர்!

தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இந்திய அளவில் கூட நல்லதொரு திருப்பமாகத் தேர்தல் முடிவுகள் வரக்கூடும் என்று தெரிகிறது. வரும் ஜுன் 3 ஆம் தேதி, நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா! அந்தக் கொண்டாட்டம், நான்காம் தேதியும் அதற்குப் பிறகும் தொடரும் என்று தோன்றுகிறது!

தொடரட்டும்!! ●

# அண்ணல் அம்பேத்கருக்குப் பேரவை மரியாதை


சென்னை


வேடசந்தூர்


பொள்ளாச்சி


ஈரோடு

# தொடர்ந்த பரப்புரை











நடைபெற்று முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டுத் தென்மாவட்டங்களில் தன் பரப்புரைகளை நிறைவு செய்த, திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் பொள்ளாச்சி, தாராபுரம், திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரப் பயணத்தைத் தொடர்ந்தார். அவருடன் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராசு, திராவிட நட்புக் கழகத் தலைவர் ஆ.சிங்கராயர், துணைப் பொதுச் செயலாளர்கள் காசு. நாகராசன், வழக்கறிஞர் வைரமுத்து, அழைப்புச் செயலாளர் புலேந்திரன், கொள்கை பரப்புச் செயலாளர் வேடசந்தூர் ரவி உள்ளிட்டப் பேரவைத் தோழர்கள் உடன் இருந்தனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## 39 இனி 31 என்றாவதா?

இரண்டு நாள்களுக்கு முன்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொகுதி மறுசீரமைப்பு குறித்து ஒரு முக்கியத்துவம் வாய்ந்த செய்தியை சற்று அழுத்தமாகப் பேசியிருந்தார்.

"மக்கள்தொகை கட்டுப்பாட்டைச் சிறப்பாகக் கடைப்பிடித்துள்ள மாநிலங்களுக்குத் தண்டனையும், கடைப்பிடிக்காத மாநிலங்களுக்கு இருமடங்காக தொகுதிகளை உயர்த்துவதும் என்ன நியாயம்? சிறப்பாகச் செயல்பட்டதற்காக நம்மைத் தண்டிப்பது ஜனநாயகத்துக்கு ஆபத்தானது... " என்ற அவரின் பேச்சு தமிழ்நாட்டின் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாகத் தெரிகிறது.

இந்திய அரசமைப்பின் 82 மற்றும் 170ஆம் பிரிவுகளின்படி, ஒவ்வொரு மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்குப் பிறகும், நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்களில் புதிய இடங்கள் உருவாக்கப் படுகின்றன. ஏற்கனவே உள்ள தொகுதிகளின் எல்லைகள் மறுசீரமைக்கப்படுகின்றன.

ஆனால் மக்கள்தொகை கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற ஒன்றிய அரசின் திட்டத்தைச் சரியாக நடைமுறைப்படுத்தியதற்காக தமிழ்நாட்டின் 39 நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ இடங்களில் இருந்து 8 இடங்கள் பறிக்கப் பட்டு, இனி 31 நாடாளுமன்றத் தொகுதிகள்தான் இருக்கும் என்று சொல்வது எப்படிச் சரியாகும்?

அதேசமயம் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாத வடமாநிலங்களுக்கு, அதே காரணத்தின் அடிப்படையில கூடுதல் தொகுதிகள் கிடைக்கின்றன.

80 தொகுதிகள் கொண்ட உத்தரப் பிரதேசம் கூடுதலாக 11 தொகுகள் பெற்று 99 என்றும், பீகாரில் 40 என்பது 50 ஆகவும், ராஜஸ்தான் 25இல் இருந்து 31 என்றும், மத்தியப்பிரதேசம் 29இல் இருந்து 33 என்றும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்கள் கூடுதலாகப் பெறுகிறது என்று ஒரு நாளிதழ் செய்தி சொல்கிறது.

2024 ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடந்த தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில்,

'மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு' என்ற பெயரால் தமிழ்நாட்டின் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க நினைக்கும் சதியை முறியடித்தாக வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றிய முதல்வர் அவர்கள், இப்போதும் அதை நினைவு படுத்துகிறார்.

பா.ஜ.கவின் சதிவலைகளில் இதுவும் ஒன்று. ஆரிய-திராவிடப் போர் தொடர்கிறது. முதல்வர் ஸ்டாலின் கரத்தை வலுப்படுத்த வாருங்கள், அணிவகுப்போம்!

## களப்பணியில்...


சென்னை


கூடுவாஞ்சேரி


திராவிட நட்புக் கழகம்

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



# பா.ஜ.கவின் வீழ்ச்சியை வழிமொழியும் வட இந்தியா!

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

பா.ஜ.க மிகவும் பலம் வாய்ந்த கட்சியென மோடி பிரச்சாரம் செய்து வந்தாலும் கூட்டணி கட்சிகளே பா.ஜ.க.வின் வெற்றிக்கு உண்மையில் பங்களிப்பை வழங்கி வருகிறது. இந்த சூழலில் கடந்த 2019 நாடாளுமன்றத் தேர்தல் போல் பலமிக்க கூட்டணியை தற்போது பா.ஜ.கவால் உருவாக்க முடியவில்லை. ஒடிசா, ஹரியானா போன்ற மாநிலங்களில் பா.ஜ.கவால் நினைத்தவாறு கூட்டணியை உருவாக்க முடியவில்லை. பீகார், மகாராஷ்டிரா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் அவர்கள் ஏற்படுத்தியுள்ள கூட்டணியால் அவர்களுக்கு ஒரு பயனும் இல்லை என்பதே களநிலவரம்.

கடந்த 2019 மக்களவை தேர்தலில் பீகார், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களின் அனைத்து 116 இடங்களையும் பா.ஜ.க கைப்பற்றியது. எனினும், இந்த முறை அந்த மூன்று மாநிலங்களிலும் ஓரிரு இடங்களே பா.ஜ.க-விற்கு கிடைக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா கூட்டணியின் தேர்தல் வியூகங்களைச் சமாளித்து பா.ஜ.க கூட்டணியால் வேட்பாளர்களைக் கூட சரியாகத் தேர்ந்தெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குஜராத்தைச் சேர்ந்த பா.ஜ.க ஒன்றிய அமைச்சர் புருசோத்தம் ரூபாலா "ராஜ்புத் ஆட்சியாளர்கள் ஆங்கிலேயர்களுடன் இணைந்து செயல்பட்டார்கள். அவர்கள் தங்களது வீட்டு பெண்களை ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர்" என்று ஒரு நிகழ்ச்சியில் பேசினார். பா.ஜ.க. அமைச்சரின் இந்த பேச்சுக்கு ராஜபுத் சமுதாயத்தினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ராஜ்கோட் தொகுதியில் பா.ஜ.க வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள அமைச்சர் ரூபாலாவை மாற்றவேண்டும் என்று ராஜபுத் சமுதாய தலைவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். பா.ஜ.க.வுக்கு எதிரான இந்தப் போராட்டம் குஜராத்தைத் தொடர்ந்து மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களிலும் பரவியுள்ளது. பாஜகவுக்கு வாக்களிக்க மாட்டோம் என்று போராட்டக்காரர்கள் 'அக்னி' முன்பாக உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

பஞ்சாப் மாநிலத்தின் பத்தின்டா தொகுதி பா.ஜ.க வேட்பாளர் பிரீத் கவுரை முற்றுகையிட்டு விவசாயிகள் குறைந்தபட்ச ஆதரவு விலை வாக்குறுதி என்ன ஆனது? டெல்லி முற்றுகை போராட்டத்தின் போது விவசாயி சுபகரன்சிங் ஏன் கொல்லப்பட்டார்?, ஏன் போராட்டம் நடத்த பா.ஜ.க அனுமதி மறுக்கிறது என அடுக்கடுக்கான கேள்விளை எழுப்பி போராட்டம் நடத்தினர்.

இந்திய ஒன்றியம் முழுவதும் பா.ஜ.க கடும் எதிர்ப்பை சந்தித்து வருகிறது. நாங்கள் நானூறு இடங்களைப் பெறுவோம் என்று தேர்தலுக்கு முன் மார் தட்டிய பா.ஜ.க தற்போது 150 இடங்களை மட்டுமே பெறும் என்று பல்வேறு கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

முதல்கட்டத் தேர்தலில் தமிழ்நாடு முன்மொழிந்த பா.ஜ.கவின் சூழ்ச்சியை, அடுத்தடுத்த கட்ட தேர்தல்களின் மூலம் வட இந்தியாவும் வழிமொழிகிறது.

பா.ஜ.க வீழும் ! இந்தியா வெல்லும் ! ●

# தலைவர் சுப.வீரபாண்டியன்

## பிறந்தநாள் வாழ்த்து!

● **கவிஞர் இராம.வைரமுத்து**

'இனி' 'நந்தன் வழி' மூலம் அறிமுகம்
இன்று 'திராவிட முழக்கம்' எனும் திருமுகம் !

'குடும்பமும் அரசியலும்' இணைந்து
'வந்ததும் வாழ்வதும்' எவ்வாறு
என உங்களிடம் கற்றோம்
'ஒன்றே சொல் நன்றே சொல்'
என்பதை
'ஒரு நிமிட செய்தி'யாய் பெற்றோம் !

'எழுவோம் திரள்வோம் ஈழம் காப்போம்' என்றீர்
சிறை மீண்டு வென்றீர்
'அது ஒரு பொடா காலம்' !

திசையெட்டும் கொள்கை பரப்ப
'திராவிடப் பள்ளி' !

பகுத்தறிவுப் பாதையில்
இளையோரை ஈர்க்க
'இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம்' !

அறிவு சார் நூல்களை
அகிலத்திற்கு தந்திட
'கருஞ்சட்டைப் பதிப்பகம்' !

சமூகநீதி கண்காணிப்பு
சரித்திரம் பேசிடும் பொறுப்பு
தங்கள் தலைமை அதற்கு சிறப்பு !

இயன்றவை அனைத்தும்
இடைவிடாது செய்து
இயங்குதலே வாழ்க்கை என நிலை நாட்டி

கழகத்திற்கு வழி காட்டி
தமிழ்நாட்டிற்கு ஒளி கூட்டி
'நாங்கள் திராவிடக் கூட்டம்' என மார் தட்டி

கலங்கரை விளக்கமாய்
அறிவாசான் அய்யா சுப.வீ !
அவர் பிறந்த நாளில்
இக் கவிமாலை அவரின் தோளில் !! ●